S.T.C. No.426/2021 Date : 06.03.2026

PW1 – வைரமுத்து த/பெ.முத்துகூடலிங்கம்

எதிரி ஆஜர் இல்லை. எதிரி தரப்பில் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.

<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>

எதிரிகளை நான் தாக்கியதாக சொல்லும் வழக்கு இதே நீதிமன்றத்தில் நடந்து அதில் நான் ரூ.1000 அபராதம் செலுத்தினேன் என்றால் சரிதான். இந்த வழக்கின் சம்பவ இடம் மற்றும் சம்பவ நேரம் ஆகியன மேற்படி வழக்கிலிருந்து வேறுபட்டது என்றால் சரிதான். இந்த வழக்கின் சம்பவத்தில் காயம்பட்டதாக கூறும் நான் மருத்துவமனைக்கு சென்று சிகிச்சை எடுத்து கொள்ளவில்லை என்றால் சரிதான். நான்தான் உண்மையில் எதிரிகளை தாக்கினேன் என்றும் எதிரிகள் என் மீது கொடுத்த புகாரிலிருந்து தப்புவதற்காக எதிரிகள் மீது நான் பொய்யான புகார் அளித்து அதற்கு ஆதவராக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் முதல் விசாரணையில் சொன்னது போல் சொன்ன நாள், நேரத்தில் சம்பவம் எதுவும் நடக்கவில்லை என்றால் சரியல்ல.